74

விலை சதம் 25

# காந்தீயம்

> **தியாகம்**
>
> நமது இலட்சியத்தை அடைய நாம் தூசியை விட அடக்கமுடையோராக இருக்க வேண்டும்.
>
> — மகாத்மா காந்தி

UNIVERSITY OF JAFFNA PERIODICALS

மலர் 15 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 108) 1977 ஒக்ரோபர் | இதழ் 1

## வாழ்விக்க வந்தவர்

உலகில் எண்ணற்ற நாடுகள் அடிமைப்பட்டுக் கிடந்ததுண்டு. அவை விடுதலை பெறக் காரணமாய் இருந்தவரும் பலருண்டு. இவர்கள் ஒரு தலைவனுக்குரிய குணங்களைப் பெற்றிருப்பார்கள். சுயநலமற்ற தன்மை; சுறுசுறுப்பாய் செயல்படுதல்; தீர்க்கதரிசனம்; தியாகம் செய்ய அனைவரையும் சித்தப்படுத்தும் திறன். இன்னும் எண்ணற்ற குணநலன்கள் அவரிடம் குடிகொண்டிருக்கும். இவர்களில் பலர் ஆடம்பர நிலையில் பிறர் வியக்கும் வண்ணம் வாழ்ந்ததுண்டு. இவர்களில்சிலர் அணுகுவதற்கே இயலா நிலையில் அஞ்சத்தக்க வகையில் இருப்பதுமுண்டு.

காந்தியடிகளோ இவர்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவராக இருந்தார். சிறிய மண்குடில்; மிகவும் விரல்விட்டு எண்ணத்தக்க எளிய உடைமைகள்; முழத்துண்டு; குறைந்தஉணவு; அவரை மகாத்மா என்னும் மாண்புறு நிலைக்கு உயர்த்த உபகரணங்களாக இருந்தவைகள் இவைகளே. இங்கிலாந்திலே இலண்டன் மாநகரின் இணையற்ற பக்கிங்ஹாம் என்னும் அரண்மனைக்கு அவர் வரவேற்கப்பட்டதுண்டு. புதுடெல்லியில் வைசிராய் பெருமகனாரின் மாளிகை வாயில் இவரது வருகைக்காக காத்திருந்ததுண்டு. அவரது காலடிகள் பட்டதால் இவைகள் புனிதமாயின. சேவா கிராமத்தில் இருந்த அவரது சிறு குடிலுக்குப் புனிதயாத்திரை போகாத அரசியல் தலைவர்கள் கிடையாது.

நாட்டோடுகளால் வேயப்பட்ட கூரை. சாணத்தால் மெழுகப்பட்ட சாதாரண மண்தரை. மூங்கில் தடிகள் செருகப்பட்ட யன்னல்கள். அதன் அடையா நெடுங்கதவும் அதனின்றும் ஒலித்த அஞ்சலென்ற சொல்லும் உலகத்திற்கே உண்மை ஒளிவீசும் உன்னதக் கலங்கரை விளக்கமாக உயர்ந்து நின்றன. எளியவாழ்க்கை உயர்ந்த சிந்தனை எனும் சொல்லோவியத்திற்கு ஒரு உயிரோவியமாக அக்குடிசை விளங்கியது.

அறவழிகளைத் துலக்கி ஒழுக்கக் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிப்பதில் அவர் ஒரு சிறந்த அந்தணர். அஞ்சிக் கிடந்தவர்களையும் பொதுக்காரியங்களில் அக்கறையற்றவர்களையும் ஒருங்கு திரட்டி, சூரியனே அஸ்தமிக்காத பெரிய சாம்ராஜ்யமொன்றை எதிர்க்க வைத்ததில் அவர் ஒரு ஈடு இணையற்ற க்ஷத்திரியர்.



நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்திப் பொருள் திரட்டுவதிலும் அதைக் காப்பதிலும் பயனுள்ள வகையில் அதை ஈடுபடுத்துவதிலும் அவர் ஒரு நிகரற்ற வைசியர். எத்தொழில் எதுவும் தெரியாமல் இருப்பது நமக்குச் சரியாமோ என்பதை உணர்த்தி எப்போதும் உழைப்பின் உன்னதத்தைத் தன் செயல் முறையால் காட்டுவதில் அவர் ஒரு கண்ணியமான சூத்திரர்.

புலனடக்கத்தில் அவர் ஒப்பற்ற பிரமச்சாரி. அறவழி கடைப்பிடிப்பதில் அவர் உயர்ந்தஇல்லறவாசி; வாழ்க்கைத்துணை நலத்துடன் பொதுத்தொண்டு ஆற்றுவதில் அவர் ஒரு எடுத்துக் காட்டான வானப்பிரஸ்தர்.

பற்றற்ற நிலையில் பயன் கருதாது பணிபுரிவதில் அவர் மிகச் சிறந்த சந்நியாசி. இவ்வையத்து நாட்டிலெல்லாம் தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டு பாழ் பட்டுக் கிடந்த மக்களை வாழ்விக்க வந்த அவரைநாம் மறக்கலாமா? உலகிற்கு ஒரு ஏற்றமான இடத்தை ஏற்படுத்தி உதவிய அந்த மகானின் மார்க்கத்தை நாம் மறுக்கலாமா?

## தேசியம்

இலங்கை நமது தேசம்; ஒரே தேசம். இலங்கை மக்கள் அனைவரும் அதன் குழந்தைகள். தேசத்தின் முன்னேற்றமே மக்களின் முன்னேற்றம். ஆகவே இலங்கை மக்கள் அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல, அதன் முன்னேற்றம் கருதிச் சிந்திக்க வேண்டும்; செயல்பட வேண்டும். இலங்கையிலுள்ள இலட்சக்கணக்கான மக்கள் எல்லோரும் தேசமுன்னேற்றத்தை மையமாக வைத்தே செயலாற்ற வேண்டும்; வாழவேண்டும். இத்தகைய சிந்தனையைக்குறிப்பதுதான் 'தேசியம்' என்ற சொல்.

★ காந்தி ஜெயந்தி விழாச் சிறப்பிதழ் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்தாரின் கோபம்

எல்லையற்ற பொறுமைக்கு ஒரு எடுத்துக் காட்டாக இருப்பவர்கள் நமது கிராமமக்கள். கடந்த பல்லாயிரம் ஆண்டு காலமாக வறுமையைப் பொறுமையோடு சகித்துக் கொண்டிருப்பவர்கள் இவர்கள்! வறுமையை வெற்றி கொள்ள முடியாமையால் அதைத் தங்களது இணைபிரியாத தோழனாகக் கருதி காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பவர்கள் நமது கிராம வாசிகள்.

உணவுப் போராட்டம் கிராம மக்களின் உரிமை உணர்வை சுதந்திர வேட்கையை, தன்மானத் தன்மையை சுட்டெரித்து விடுகிறது. அறியாமை சுயசிந்தனையை வளரவிடுவதில்லை. மூடநம்பிக்கைகள் இவர்களை முன்னேற விடுவதில்லை.

வறுமை, அறியாமை, உரிமை உணர்வின்மை ஆகியவை கிராமத்தாரின் பலவீனங்கள்; இதை நன்றாகப் புரிந்து கொண்ட அரசியல்வாதிகளும் பிறரும் கிராமமக்களைப் பகடைக்காய்களாக வைத்து விளையாடிக் கொண்டிருக்கின்றனர்!

கிராம மக்களின் பலவீனங்களில் பெரிய பலவீனம் அவர்களிடையே ஒற்றுமையின்மையாகும். அவர்களுக்கென ஒரு அமைப்பு இல்லை. அவர்களது குறைகளை வெளியிடுவதற்கான பலமிக்க ஒரு கருவி அவர்களுக்கில்லை. தங்களுக்கு இழைக்கப்படும் அநீதியை அமைதியாகப் போராடி நீக்கிக் கொள்வதற்கான மார்க்கமும் அவர்களுக்கில்லை.

அரசாங்க ஊழியர், வங்கி ஊழியர், தொழிலாளர் ஆகியோர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு தங்களது கோரிக்கைகளுக்கு அரசாங்கத்தைப் பணிய வைக்கிறார்கள். அத்தகைய அமைப்பாற்றல் இவர்களுக்கில்லை.

கிராமவாசிகள் வாயில்லாப் பூச்சிகள். ஆரவாரமின்றி அமைதியாக இருப்பவர்கள் எனினும் இந்த அமைதி எரிமலை அமைதியாகும். இதற்கான அறிகுறி அவ்வப்போது தெரியத்தான் செய்கிறது.

கிராமத்தாரின் கோபத்திற்கு வடிகாலாக அமைகின்றது தேர்தல். தங்களது உள்ளங்களின் அடித்தளத்தில் அமைதியாக சலசலத்துக் கொண்டிருக்கும் கோப உணர்வு தேர்தல் காலங்களில் தெளிவாக வெளிப்படுகிறது. அப்போது பல மிக்க ஆட்சியையும் தூக்கி வீசக்கூடிய அசுர சக்தியை அவர்கள் பெறுகின்றனர். அரசு கவிழ்க்கப்படுகிறது. அமைதிப் புரட்சி ஏற்படுகிறது. கிராமத்தாரின் கோபம் குறைகிறது! ஆனல் கிராம மக்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வந்தால் ஒரு நாள் இவர்களது கோப உணர்வு கட்டுக் கடங்காமல் போய் எரிமலையென வெடித்துவிடக் கூடும். சூறவளியென சுழன்றடித்து விடக்கூடும். சிறு துளிகள் சேர்ந்து பெரு வெள்ளமாகிவிடக்கூடும்.

இந்நிலை நீங்க வழி என்ன? சமூகப் பொருளாதாரத் திட்டத்தின் ஒருபகுதியாக கிராமமுன்னேற்றம் இல்லாமல் கிராம முன்னேற்றத்தை மையமாக வைத்து சமூக-பொருளாதார திட்டம் தீட்டப் படவேண்டும்; செயல்படுத்த வேண்டும்.

**வினோபாவின் குட்டிக் கதை**

# பொன்னும் மண்

ஓர் இடத்தில் வழியில் பொன்னுலான பொருள் ஒன்று கிடந்தது. இதை என்ன செய்யலாம் என்று கேட்டார்கள். இதை எடுத்த இடத்திலேயே வைத்துவிடுங்கள். பொருளை இழந்தவன் தேடிவந்தாலும் வருவான். இல்லாவிட்டால் அதை பொலீசில் ஒப்படைத்து விடுங்கள், அல்லது கிராமத்து கிராமசபையிடம் இதை ஒப்படைக்கலாம். இதைப் பேசாமல் தாமே பையில் போட்டுக் கொள்ளுவது முறைகேடானது. இந்தத் தவருன எண்ணம் ஏற்படுவதே தவறு என்று சொன்னேன்.

ஆனல் ரங்கா-பங்கா என்ற கூலி வேலை செய்யும் தம்பதிகள் இந்த விஷயத்தில் எல்லோரையும் பிரமிக்கச் செய்து விட்டனர். வழியில் பொன்னணி கிடப்பதைக் கண்ட ரங்கா அதன்மீது நிறைய மண்ணையும் புழுதியையும் வாரிக்கொண்டு வந்து போட்டான். ஏன் இவ்வாறு செய்கிறீர்கள், என பங்கா கேட்டாள்.

''இந்தப் பொருளைப் பார்த்து உனக்கு அதன் மேல் ஆசை ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே இவ்வாறு செய்கிறேன்'' என்று பதில் சொன்னன் ரங்கா.

''தூசு மேல் தூசைப் போடுவது வீண்வேலை'' என்று சிரித்தாள் பங்கா.

## சமூகத்தில் மறைமுகக் கொள்ளை

நாட்டில் சமூக, பொருளாதார புரட்சியுடன் தார்மிகப் புரட்சியும் ஏற்படுத்தப்படுவது அவசியம். வழிப்பறி முதலிய நேரடியான முறைகளில் பொருட்களைக் கவர்ந்து செல்லும் கொள்ளைக்காரர்கள் ஒரு புறமிருக்க மக்களைச் சுரண்டி வாழும் மறைமுகக் கொள்ளையர்கள் சமுதாயத்தில் ஊடுருவியுள்ளனர். சமூக பொருளாதாரத்துறையிலும் தார்மீகரீதியிலும் முழு அளவில் புரட்சியை ஏற்படுத்தினலொழிய இந்தக் கொள்ளைக்காரர்களை சமுதாயத்திலிருந்து களைந்தெறிய முடியாது. சமுதாயத்திலுள்ள மறைமுகக் கொள்ளைக்காரர்கள் பற்றிய பிரச்சினை பிரமாண்டமானது. அந்தப் பிரச்சினையின் முன் மிகச்சாதாரணமான நான் எம்மாத்திரம்?

கொள்ளைச் செயல்களுக்கும் வறுமை நிலைக்கும் சம்பந்தமில்லை, ஏனெனில் செல்வம் மிகுந்த மேற்கத்திய நாடுகளில் இங்கு இருப்பதைவிட அதிக பயங்கரமான கொள்ளைக்காரர்கள் இருக்கிறார்கள். அதிகார வர்க்கத்தின் ஆதிக்கம் வளர்ந்து வருவது கவலைக்குரியது. கட்சி, நிர்வாக அதிகார வர்க்கம், தொழில் நுட்பத்துறை அதிகார வர்க்கம் ஆகியவை அடங்கிய ஒருபுதிய வர்க்கம் உருவாகியுள்ளது. மக்களைச் சுரண்டும் இந்தப் புதிய வர்க்கம் சமுதாயத்திற்கு ஆபத்தானது.

— ஜெயப்பிரகாஷ் நாராயண்

★ அகிம்சை வழியில் அமைப்போம் உலகை ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வோதயமும் நமது வழிமுறைகளும்

மகாத்மாகாந்தி

நான் பள்ளிக்கூடத்தில் படித்து வந்த காலத்தில் பாடப்புத்தகங்களைத் தவிர அநேகமாக வேறுபுத்தகங்களைப் படித்ததில்லை எனலாம். சேவை வாழ்க்கையில் இறங்கிவிட்ட பிறகு படிப்பதற்கு எனக்கு நேரமே இருப்பதில்லை. ஆகையால் நூல்களைப் படித்த அறிவு எனக்கு உண்டென்று சொல்லிக்கொள்வதற்கில்லை. என்றாலும் இந்தக் கட்டாயமான தடையால் நான் அதிகமான நஷ்டம் அடைந்து விடவில்லை என்றே கருதுகிறேன். ஆனால் இதற்கு மாறாக நான் கொஞ்சமாகப் படித்து, படித்ததையெல்லாம் அப்படியே முற்றும் கிரகித்துக்கொண்டு விடுவதற்கு உதவியாக இருந்தது. அத்தகைய நூல்களில் என் வாழ்க்கையில் நடைமுறையான மாறுதலை உண்டாக்கிய நூல் 'கடையனுக்கும் கடைத்தேற்றம் என்ற நூலே யாகும். பின்னர் அதைக் குஜராத்தியில் மொழிபெயர்த்து சர்வோதயம் (சர்வ ஜன நலம்) என்ற பெயருடன் வெளியிட்டேன்.



## உழைப்புக்கு ஒரே மதிப்பு

ரஸ்கினுடைய இம் மகத்தான நூலில் என் உள்ளத்தில் உறுதிப்பட்டிருந்த கொள்கைகள் பிரதிபலித்திருப்பதை நான் கண்டுகொண்டதாக நினைக்கிறேன். அதனால்தான் அது என்னை ஆட்கொண்டதோடு, என்வாழ்க்கையையும் மாற்றிக் கொள்ளும்படி செய்தது. மனித உள்ளத்திலிருக்கும் நல்ல தன்மையை எழுப்பி விடவல்லவனே கவி. ஆனால் கவிகள் எல்லாரின் உள்ளங்களிலும் இதுபோன்ற மாறுதல்களை உண்டாக்கி விடுவதில்லை. ஏனெனில் எல்லாரும் சரிசமமான வளர்ச்சியை அடைந்திருக்கவில்லை.

'கடையனுக்கும் கடைத்தேற்றம்' என்ற நூல் பின் வருபவைகளைப் போதிக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது.

1. எல்லாருடைய நலனில் தான் தனிப்பட்டவரின் நலனும் அடங்கியிருக்கிறது.

2. தங்கள் உழைப்பினால் ஜீவனோபாயத்தைத்தேடிக் கொள்வதற்கு எல்லாருக்குமே ஒரே மாதிரியான உரிமை இருப்பதால் சவரத் தொழிலாளியின் வேலைக்கு இருக்கும் அதேமதிப்புத்தான் வக்கீலின் வேலைக்கும் உண்டு.

3. ஒரு பாட்டாளியின் வாழ்க்கையையும், அதாவது நிலத்தில் பாடுபடும் குடியானவனின் வாழ்க்கையையும், கைத்தொழில் செய்பவரின் வாழ்க்கையுமே, வாழ்வதற்கு உகந்த மேன்மையானவாழ்க்கைகள்.

## விழித்தெழுந்ததும் தயாரானேன்

இவைகளில் முதலில் கூறப்பட்டதை நான் அறிவேன். இரண்டாவதாகக் கூறப்பட்டிருந்ததை அரைகுறையாகவே அறிந்து கொண்டிருந்தேன். மூன்றாவதாகக் கூறப்பட்டதோ என்புத்தியில் தோன்றவே இல்லை. இரண்டாவதும் மூன்றாவதும் முதலாவதாகக் கூறப்பட்டிருப்பதிலேயே அடங்கியிருக்கின்றன என்பதை கடையனுக்கும் கடைத்தேற்றம் பட்டப் பகல் போல் எனக்கு வெட்ட வெளிச்சமாகும்படி செய்தது. பொழுது புலர்ந்ததும் நான் இந்தக் கொள்கையை நடைமுறையில்கொண்டு வரத்தயாரானேன்.

நம் சர்வோதயக்கனவு, அதாவது உண்மையான ஜனநாயகம் நடைமுறைக்கு வந்துவிட்டால் நம் நாட்டிலுள்ள மிகவும் எளியவனையும் கீழ்நிலையிலிருப்பவனையும் மிகவும் உயரியவனைப் போலவே இந் நாட்டு மன்னனாக மதிப்போம். எல்லோரும் தூயவர்கள், அவ்வாறில்லாதவர்களும் தூய்மையாக்கிக்கொள்வார்கள் என்பது இதில் அடங்கியிருக்கிறது. அறிவாற்றலும் தூய்மையும் கை கோத்துச் செல்ல வேண்டும்.

ஒரு சமூகத்திற்கும் இன்னொரு சமூகத்திற்குமிடையே எவ்வித வேற்றுமையையும் அப்போது எவரும் பாராட்ட மாட்டார்கள். ஒவ்வொருவரும் தம்மைப்போலவே அனைவரும் சமமானவர்கள் என்று கருதி, அன்பென்னும் பட்டு வலையில் அவர்களை ஒன்றாக இணைத்து வைத்துக்கொள்ளுவார்கள். ஒருவரைத் தீண்டத்தகாதவர் என்று யாரும் கருத மாட்டார். பாடுபடும் பாட்டாளியும் பணம் படைத்த முதலாளியும் ஒரு சமமானவர்கள் என்றே நாம் எண்ணுவோம்.

ஒவ்வொருவரும் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டு நேர்மையான வாழ்க்கையை எவ்விதம் நடத்துவது என்று அறிந்திருப்பர். மூளை உழைப்பிற்கும் உடலுழைப்பிற்கும் உயர்வு தாழ்வு என்ற எவ்வித வேற்றுமையும் இராது.

இந்த லட்சிய நிலையை அடைவதற்கு நாம் எல்லோருமே தோட்டிகளாக மாறவேண்டும். ஒவ்வொருவரும் சுதேசியை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும். ஒவ்வொரு பெண்ணையும் தனது மனைவி என்று கருதாமல், தனது தாய், சகோதரி, மகள் என்று அவளது வயதிற்குத் தகுந்தாற் போல் கருதி அவர்கள் மீது காம இச்சை கொள்ளாமல் ஒழுக வேண்டும். சமயம் நேர்ந்த போது தன்உயிரையும் ஈயத் தயாராய் இருக்க வேண்டும். பிறனுயிரைப் பறிப்பதென்ற எண்ணம் என்றென்றும் எழவே கூடாது.

சாதனங்கள் தூய்மை பெறவேண்டும் குறிக்கோளைப் பற்றி முடிந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

**அன்பு வழியே அண்ணல் வழி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தீயம்

காந்தி நிலையம்
உருத்திரபுரம், [இலங்கை]
தொலை பேசி: 254
(கிளிநொச்சி)
காந்தி ஆண்டு 108
1977 ஒக்ரோபர்


## சமயமும் பொருளாதாரமும்

உலகில் மக்கள் தொகை பெருகியுள்ளது. வாழ்க்கைச் செலவினங்கள் பல்கிவிட்டன. இதனால் வாழ்வுச் சுமை மிகப் பாரமாகி விட்டது. இந்தச் சுமையைக் குறைப்பதற்காக மக்கள் தொகையைக் குறைக்கவும், நுகர் பொருள்களைப் பங்கிடவும் அரசாங்கங்கள் கட்டாய நடவடிக்கையில் இறங்கியுள்ளன. இதனால் நாட்டில் ஒவ்வொருவரும் கட்டாயமான பொருளாதார நடவடிக்கைகளுக்குக் கட்டுப்பட்டுவாழவேண்டியிருக்கிறது. கட்டுப்பாடு தனிமனிதனின் சுதந்திரத்தை அபகரிக்கின்றது. கட்டற்ற சுதந்திர நிலையே ஆனந்தமான நிலை.

ஆனால் கட்டுப்பாடற்ற பொருள் வளம் பெருக்கும் நிலை சுயநலமிக்க காட்டுமிராண்டித்தனமான நிலையாகும். பூமியும் வானமும் தந்த வளத்தை ஒருவரும் துன்பப்படாத முறைமையில் பங்கிட்டு நுகர்வதுதான் அறம். ஆனால் வல்லவர் சிலர்க்கு அப்படி மனம் வரவில்லையே! என்ன செய்வது? அதனால் தான் உலகில் பல நாடுகள் கடுமையான சட்ட திட்டங்களாலும், பொருளாதார நல்வாழ்வினைப் பங்கிட்டு அளிக்கிறார்கள்.

எல்லோரும் நல்வாழ்வு வாழ்வதற்கு அரசின் அச்சுறுத்தலால் பங்கு முறைப் பொருளாதாரத்தை நிலைநிறுத்த வேண்டுமா? இன்றேல் நல்லுறவு அன்பு முறையால் பங்கு முறை நுகர்வு வேண்டுமா? முதற் கூறிய சமதர்மம் அச்சத்தால் வருவது. மற்றையது பரிவினால் அன்பினால் வருவது.

வள்ளுவர் கூறுவார் ''அச்சமே கீழ்களது ஆசாரம்'' என்று. பயத்தினால் நாம் சமதர்மத்தை நிலைநாட்டினால் நாம் கீழ்தகைய ஒரு சமுதாயத்தைப் படைத்தவராவோம்.

பங்கு முறைப் பொருளாதாரம் அன்பினால், தியாகத்தினால் நிலைநாட்டப்பெற்றால் அது மனிதனின் அகவாழ்வை வளம்பெறச் செய்யும். மனிதன் அகவாழ்வும் உடல் வாழ்வும் உடையவன். நம் பயத்தினால் கட்டுப்பெற்ற அகமும், மற்றையவர் பயத்தினால் நாம் வளர்க்கும் உடலும், ஒன்றுபட்டு வளர்வதால் நாம் நல்லதொரு சமுதாயத்தை எழுப்ப முடியாது. வள்ளுவர் சொல்கிறார்; ''அன்பின் வழியது உயிர்நிலை'' என்று. எனவே மனத்தினில் அன்பு வளர்ந்து அதனால் பங்கு முறைப் பொருளாதாரம் அமைந்தால்தான் நாம் உயிருள்ள ஒருசமுதாயத்தைப் படைக்க முடியு

நம் அகத்தில் பயத்தை நாட்டாது, கட்டுப்பாடான ஒரு மனத்தைத் தரக்கூடியது ஆயுதமன்று; தண்டனை தரும் சட்டமன்று. சமய நெறி ஒன்றே பயமிலாக்கட்டுப்பாடான வாழ்வை நமக்குத் தரும். சமய முறையை அடிப்படையாகக் கொண்டு நாம் நம் நெஞ்சில் உறவை, உணர்வைப் பாய்ச்சிப் பங்கு முறைப் பொருளாதாரத்தை நாம் வளர்க்கவேண்டும். அப்பொழுது தான் நாம் அறிவறிந்து வளர்த்த ஒரு சமதர்ம சமுதாயம் மலரும்.

ஆயுதம்,சிறை முதலியவற்றைக் கொண்டு அச்சுறுத்தி ஒரு சமதர்ம சமுதாயத்தை அமைத்தால் அது ஒரு பயந்து வாழும் சமுதாயமாகவே முடியும். அதிலிருந்து நாம் நற்பயனை எதிர்பார்க்க முடியாது.

— இ. இ.

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரை தெளிவான விளக்கமும் அதைப் போற்றுதலும் இருந்தாலும் கூட அதை அடைவதற்கான வழிகளை அறிந்து கடைப் பிடிக்காவிட்டால் நமது குறிக்கோளை நாம் அடைய முடியாமலே போய்விடுவோம். எனவே வழிகளைப் பேணிக் காப்பதிலும் அவற்றைத் தீவிரமாகப் பயன் படுத்துவதிலும் நான் மிகுந்த அக்கறை கொள்கிறேன். அவற்றைச் சரியாகப் பார்த்துக் கொண்டால், நாம் நமது குறிக்கோளை அடைவது உறுதி. நமது சாதனங்கள், வழிகள் எவ்வளவு தூயவையாய் இருக்கின்றனவோ, அவ்வளவுக்கே நமது லட்சியத்தை நோக்கிய முன்னேற்றத்தின் வேகமும் இருக்கும் என்று நான் உணர்கிறேன்.

### மேனாட்டினரைப் பாருங்கள்

இந்த முறை நீண்டதாகத் தோன்றலாம். மிகவும் நீண்டதாகக் கூடத் தென்படலாம். ஆனால் இதுதான் மிகவும் சுருக்கமான வழி என்ற உறுதி எனக்குண்டு.

மேலை நாட்டிலுள்ளவர்கள் மனிதனது முழுக் கடமையும் மனித குலத்தில் பெரும்பாலோரது சுகத்தை அதிகரிப்பது தான் என்று பொதுவாக எண்ணுகிறார்கள். அந்தச் சுகமும் உடற்சுகமும் பொருளாதார முன்னேற்றமுமே எனக்கருதப்படுகிறது. இவ்வகையான சுகத்தை அடைவதில் தார்மிக நியதிகள் தகர்க்கப்படுமேயானால் அது அவர்களுக்கு ஒரு பொருட்டாகத் தோன்றுவதில்லை. ஆனால் இந்த வழிப்பட்ட சிந்தனையின் விளைவுகள் ஐரோப்பாவை ஒரு முறை நோக்குபவர்களுக்கு எளிதில் புலனாகும்.

தார்மீக நெறியைப் புறக்கணித்து உடற்சுகத்தையும், பொருளாதார முன்னேற்றத்தையும் மட்டும் தேடுவது தெய்வீக விதிக்கு நேர்மாறானது. இதை மேலைநாட்டு அறிஞர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். தார்மிக விதிக்குப் பணிந்து நடந்தால்தான் மனிதர்கள் இன்பமாக வாழமுடியும் என்று தமது நூலில் ('கடையனுக்கும் கடைத்தேற்றம்') எடுத்துக் காட்டிய ஜான்ரஸ்கின் அத்தகையோரில் ஒருவர்.

உலகின் மதங்களிலெல்லாம் வித்தாக விளங்குவது தார்மிக நெறிதான். அதைக் கடைப் பிடித்து ஒழுகுவதன் மூலமே நாம் இன்பமாக வாழமுடியும்.

★ சர்வோதய நற் சமுதாயத்தினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சமுதாயம்

— க. அருணாசலம்

காந்தியடிகளும் நம்மைப்போல் ஒரு மனிதர், நம்மைப்போல் சாதாரணமாகவே வாழ்ந்தார். ஆனால் அவரைப் பலரும் மந்திரசக்தி படைத்தவராக, மாமனிதராக, அவதாரபுருஷராகக் கருதுகிறார்கள். இப்படியெல்லாம் எண்ணிவிடக்கூடாது என்று தான் காந்தியடிகள் நம்மைப்போலவே வாழ்க்கை நடத்தினார். அவரைப்போலவே நாமும் எளிய அகிம்சை வாழ்க்கையை மேற்கொள்ளவேண்டுமென்று அவர் விரும்பினார்.

பல பேரறிஞர்கள் பல்கலைக்கழகங்களில் பயின்றவர்கள். இப்போது திசை மாறி அணுகுண்டு வேண்டுமென்று சொல்கிறார்கள். புது நகை எனக்கே வேண்டும் என எண்ணும் பெண்; தயாராகிற ஒவ்வொரு பொருளும் தனக்கே வேண்டும் என எண்ணும் சிலர்; கிடைக்கின்ற இடத்தில் தாமே அமர வேண்டுமென நினைப்போர் அடங்கிய இன்றைய உலகுதான் நமக்கும் அணுகுண்டு வேண்டும் என எண்ணுகிறது.

அணுகுண்டு மிகவும் பயங்கரமானது. அதற்கு ஆத்மாவை அழிக்கும் ஆற்றல் இல்லைதான். எனினும் இந்த உலகில் மனிதன் தனது உடல் பலத்தைக் கொண்டு போராடியே முன்னேறி வந்திருக்கிறான். மனிதன் தனது கருவி காரணங்களைக் கொண்டே அணுகுண்டைக் கண்டுபிடித்துப் பெருக்கினான். ஆகவே உடலை அநாவசியமாக அழிய விட்டுவிடக் கூடாது. உடலை ஓம்பிப் பாதுகாக்க வேண்டும்

நாகசாகி; ஹிரோஷிமா ஆகிய இடங்களில் இரண்டு குண்டுகள் போடப்பட்டன. அங்கே அதனால் ஏற்பட்ட நாசத்தைப் பார்த்து உலகமே நடுங்குகிறது. இந்தக் குண்டுகளை இரண்டாவது உலக மகாயுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வல்லரசுகள் உபயோகப்படுத்தின. அதற்கப்பால் ஜலவாயுக் குண்டுகள் சோதித்துப் பார்க்கப்பட்டன. இவற்றின் விளைவுகளைக் கேட்டால் நமக்கும் நடுக்கம் ஏற்படும். ஒரு மணி நேரத்துக்கு ஒன்று வீதம் ஐந்து ஜலவாயுக் குண்டுகளைப் போட்டால் பிரான்ஸ், ஜெர்மனி, பிரிட்டன் போன்ற நாடுகள் பூடற்று கண்ணாடி போல் உறைந்துவிடும். எந்த உயிரும் அங்கே தழைக்காதொழிந்துவிடும். சந்திரனில் உயிர் தோன்றாவண்ணம் மண் செத்துப் போயிருக்கிறது என அறிகிறோம். ராஜஸ்தான் பாலைவனத்திலும் பூமி அப்படியிருக்கிறது. அதனைவிட மோசமாக இந்த ஜலவாயுக் குண்டுகளால் இடம் உருகி விடும் என்கின்றனர். அதுமட்டுமல்ல, அவற்றுக்கும் மேலே 4500 மைல்களுக்கப்பால் உள்ளவர்களையும் அது பாதிக்கும். அத்தொலைவில் உயிர் இருக்கும்; ஆனால் ஊனம் ஏற்படும். 100 ஆண்டுகளுக்கு கருத்தரிக்கப்பட்டவை பயங்கர நோய் நொடிகளுக்கு உட்படும். இன்றைக்கு உலகில் புற்றுநோய் அதிகம் தோன்றியதற்கே கூட அணுகுண்டு சோதனைகளாலேற்பட்ட மின் - அலை ரேடியோ ஆக்டிவ் அலைகளே காரணம் என்று சொல்கிறார்கள்.

உடல் மனிதனுக்குத் தேவையானதாக இருக்கிறது. அதனைச் சிதைக்கும் இக் குண்டுகள் மனிதனுக்குத் தீங்கிழைப்பவை. உடலோடு இருந்தால் தான் மனிதன் உண்மையை அறிய முடியும். எனவேதான் காந்தியடிகள், மிக உறுதியாக இந்த ஆயுதங்களை உற்பத்தி செய்வதும் உபயோகிப்பதும் நிறுத்தப்பட வேண்டும் என்றார். இனி அகிம்சையே ஆயுதம்; அதுதான் வாழும் நெறியாக இருக்க வேண்டும் என்பதில் யாதொரு ஐயமும் வேண்டாம் என்றார்.

மனிதனிடத்தில் உடல், மனம், உயிர் இருக்கின்றன. உடல், மனம், உயிர் ஆகியவற்றின் துணை கொண்டு மனிதன் பரமாத்மாவாக ஆகலாம். உடலையும் அதன் ஆற்றலையும் வளர்த்துப் பெருக்கிக் கொண்டு வந்துள்ள மனிதன் மனமும் வளர்ந்து வளர்ந்து புதிய எல்லையை அடைந்திருக்கிறது. அறிவு நிலையிலிருந்து பகுத்தறிவு நிலைக்கு உயர்ந்தாரின் மனமே மிக்குயர்ந்தது. அறிவுபெறவேண்டும்; அப்பால் பகுத்துப்பார்க்கவேண்டுந்தான்; ஆனால் வெறுமனே பகுத்துப் பகுத்துப் பார்த்துக் கொண்டிருந்தால் முழுவளர்ச்சி கிட்டுவதில்லை: இதனால் சிற்சில சமயங்களில் தீமையும் நேரும். அணுவைப் பிளப்பதால் நாசம் ஏற்படுவதைப் பார்க்கிறோம். சமூகத்தையும் அங்ஙனம் பிரித்தால் நாசமேற்படுகிறது. பகுப்பதால் ஏற்படும் நாசத்தை தொகுத்தால் போக்கலாம். எதனையும் தொகுத்துப் பார்க்கும் அறிவு (INITUTION) உள்ளுணர்வு வந்தால் இந்த அணுகுண்டு காலத்திலுங்கூட சத்தியத்தைப் பின்பற்றுவதன் மூலம் உலகில் சுபிட்சத்தைக் கொண்டுவரலாம்.

இன்றைக்கு விஞ்ஞானமும் வன்முறையும் ஒத்துழைக்கின்றன. மக்கள் உயர விஞ்ஞானமும் ஆத்மஞானமும் ஒன்றாக வேண்டுமென்கிறார் மகரிஷி வினோபா. இதனையே, இப்புதுவழியையே காந்தியடிகள் தன்னளவில் வாழ்ந்து காட்டினார். உண்மையில் உறுதியாக நின்றால் நமக்கு நல்லது. அப்போது விஞ்ஞானமும் நமக்கு உதவும். இதனையுணர்ந்தால் அணுகுண்டு வெடிப்பதைத் தவிர்த்து விடலாம். வெடிகுண்டு ஆய்வாவர்களும் நம்மைப்போல் மனிதர்களே. அவர்கள் பொருளைப் பற்றி ஆராய்ந்து புது வழிகாண முயலவில்லை. அருள் ஆய்விலே ஈடுபட்டால் உலகம் எப்படி இருக்கும் என எண்ணிப்பாருங்கள். 'உடலே' நான் என நினைப்பதால் தான் உற்பத்திப் பொருட்களை தனக்கென எடுத்துக்கொள்ளும் மக்கட் சமுதாயமாக இன்று இருக்கிறோம். கொடுத்துவாழும் சமுதாயமாக மாறினால் சமுதாயத்தில் வறுமையும் பட்டினியும் இராது. இந்த மாறுதலைக் காரிய சாத்தியமாக்க முடியுமா?

அடிப்படையில் நாம் ஆன்மா இந்த உணர்வு அனைவருக்கும் ஏற்பட வேண்டும். உடம்பு உண்மை உறையும் திருக்கோவில். அந்த உண்மையைக் காண ஒரு சிறிது நேரமாவது செலவிட்டால் நல்லது. கல்விக்காகச் செலவிடும் நேரத்திலும் பணத்திலும் 1/8 பங்கு அல்லது 1/16 பங்கு செலவிட்டால் ஏராளமான பலன் கிடைக்கும்.

மனிதன் அடிப்படையில் கெட்டவனாக இருப்பவன் என வெறுக்காமல் அவனுடைய சக்திகளை வெளிப்படுத்தும் வேலைகளைச் செய்ய வேண்டும். வேலைகளைப் பிறருடன் கலந்து செய்வது நல்லது. குடும்பத்தில் கூட அம்மாவும் அப்பாவும் இருவரும் ஒருவருடன் ஒருவர் கலந்து காரியங்களைச் செய்கிறார்களல்லவா? குரங்கிலிருந்து வந்த மனிதர்களுக்கு-ஆஞ்சநேயன் வணக்கத்திற்குரியவன்; அது ஒரு புறமிருக்க - விலங்குக்

( 6 ஆம் பக்கம் பார்க்க)

நிர்மாணம் செய நித்தமும் உழைப்போம் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரி - பாம்புச் சண்டை!

'' அரசியல் அயோக்கியனின் இறுதிப் புகலிடம்'' என்ற கூற்று நடைமுறையில் அரசியல் வாதிகளின் நடத்தையின்மீது கூறப்பட்ட தீர்ப்பு ஆகும்.

அரசியல் வாதிகள் உலகம் முழுவதும் பெரும்பாலும் ஒரேமாதிரியாகத்தான் இருக்கிறார்கள்! தேர்தல் காலத்தில் கொள்கைகள், குறிக்கோள்கள் பற்றிப்பேசுகிறார்கள். தேர்தலில் வெற்றி பெற்றுப் பதவிக்கு வந்தபின் எப்படியாவது பத்வியைத தக்க வைத்துக் கொள்வதிலேயே இவர்களது கருத்தும், கவனமும் செலவாகிறது!

இந்த அரசியல் வாதிகளைப் பற்றி நினைக்கும்போது எனக்கு நான் சிறுவனாக இருந்தபோது ஆர்வத்துடன் எதிர்பார்த்த 'மந்திர வாதியின்' வித்தைதான் நினைவுக்கு வருகிறது.

மந்திரவாதி கூட்டத்தைச் சேர்க்க ஒரு வழக்கமான உத்தியைக் கையாள்வான். ஒரு முளை அடித்து அதில் ஒரு கீரியைக் கட்டுவான். ஒரு பெட்டிக்குள் அடைத்திருக்கும் நாகபாம்பைத் தனது கை முட்டியை அசைப்பதன் மூலம் படமெடுக்கச் செய்வான். கீரியின் பக்கத்தில் கொண்டு செல்வான். கட்டப்பட்டிருக்கும் கீரி பாயும்! நாகப்பாம்பு சீறும்!! கீரிக்கும் பாம்புக்கும் பயங்கரமாக சண்டை நடக்கப்போவதாகக் கூறுவான் மந்திரவாதி. பெருங் கூட்டங் கூடும். அக்காட்சியைக் காணும் கூட்டத்தினரிடையே ஒரு பரபரப்பு ஏற்படும். கீரி-பாம்பு சண்டையை ஆவலோடு எதிர்பார்த்து நிற்பர். மந்திரவர்தி தன் பிற வேலைகளையெல்லாம் காட்டி காசு சேர்த்து விடுவான், ஆனால் கீரி-பாம்பு சண்டைமட்டும் நடக்காது.

அரயல் வாதிகளின் தேர்தல் கால சூளுரைகள் எனக்கு மந்திரவாதியின் கீரி-பாம்பு சண்டையை நினைவூட்டத் தவறுவதில்லை!

அதேபோன்று இந்த அரசியல் வாதிகளைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் எனக்கு அந்தக் குரங்கின் பாட்டுதான் நினைவுக்கு வரும். எந்தப் பாட்டு? அதுதான் ...... வாலு போய்க் கத்தி வந்தது டம் டம் டம் என்ற பாட்டு! உங்களுக்கும் நினைவு வருகின்றதல்லவா? மலை மீது உட்கார்ந்து கொண்டு மேளம் கொட்டிய அந்த வாலறுந்த குரங்குக்கும் அரசியல் வாதிகளுக்கும் என்ன வேறுபாடு?

அரசியல் வாதிகள் கீரி-பாம்பு சண்டை விடுவதாகக் கூறி கூட்டம் சேர்க்கும் மந்திரவாதிகளைப் போன்று இருக்கக் கூடாது, வாலறுந்த குரங்கின் கதையாகவும் ஆகக்கூடாது. இதற்கு வழி என்ன? மக்கள் விழிப்படைவது விழிப்பாக இருப்பது ஒன்று மட்டும் தான் இதற்கான ஒரே வழியாகும்.

ஜனநாயகத்தின் விலை மக்கள் எப்போதும விழிப்போடு இருப்பதுதான்' எனக் கூறினர் ஹெரால்டு ஜே. லாஸ்கி என்ற அரசியல் அறிஞர். மக்கள்குழு அமைத்து முழுமைப்புரட்சி ஏற்படுத்த வேண்டுமென்கிறார் ஜே. பி. இரண்டும் ஒன்றுதான்.

சமயோசித அரசியல் (POLITICS OF EXPEDLENCY) நமது சாபக்கேடு. மக்களின் நீதி உணர்ச்சி மரத்துப் போய்விட்டது. படித்தோரின் அசட்டைப் போக்கு பலப்பட்டுப் போய் விட்டது. யோக்கியர்கள் அரசியலை விட்டு ஒதுங்கிப் போகின்றனர்!

அரசியலில் ஈடுபடுவது கரிக்கடையில் வேலைபார்ப்பது போன்றது. உடலும் உடையும் கரிபடிந்து கறுப்பாகத்தான் செய்யும். இத்தகைய நசு நாறி அசட்டைப் போக்கை அநுமதித்துக் கொண்டிருக்கத்தான் வேண்டுமா?

— சாதாரணன்

## வாழ்வளிக்கும் சர்வோதயம்

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழகத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்து அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் தொண்டினை தமிழ் நாடு சர்வோதய மண்டல் மதுரையில் மேற்கொண்டுள்ளது.

இத் தகவலை மேற்படி மண்டல் பொதுச் செயலாளர் திரு. க. மு. நடராஜன் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்கும் திரு. க. மு. நடராஜனுக்குமிடையே நடைபெற்றுள்ள கடிதப் பரிவர்த்தனையிலேயே திரு. நடராஜன் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

## வாசகர்களுக்கு அறிவிப்பு

நாட்டிலேற்பட்ட இனக் கலவரம் காரணமாக ஆகஸ்ட், செப்ரெம்பர் காந்தீயம் இதழ்கள் வெளியிடப்படவில்லையென்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

— ஆர்.

## புதிய சமுதாய ...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குணம் கொஞ்சம் ஒட்டிக்கொண்டிருக்கிறது. இந்தக் குணம்மாற நாள் தோறும் சிந்தித்து ஆண்டு முழுவதும் முயற்சிக்க வேண்டும்.

அணுகுண்டைவிட ஆற்றல்மிக்கது அன்பு. இந்த அன்பின் வழியில் - புதிய சமுதாயத்தைப் படைக்க விரும்பினர் வினோபா, எழும்பிரச்சினைகள் அனைத்தையும் அரசினை எதிர்பாராமலேயே தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றார். மனுதயாரித்து அரசுக்கு அனுப்பி அவர்கள் மூலம் 'புரட்சிகரமான கல்விச் சீர்திருத்தங்களைக் கொண்டுவர முடியாது. '' ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின் நீள்வினையான் நீளும் குடி'' - என்பது குறள். முயற்சி, நிறைந்த அறிவு, என்று இரண்டாலும் இடையறாமல் தொழில் செய்து வந்தால் நாடு உயர்வு பெறும். நாட்டை முன்னேற்றச் செய்வேன் என்று கடமை உணர்ந்து தொழிலாற்றுவோர்க்கு ஆன்ற அறிவு வேண்டுமென்றார் வள்ளுவர். முயற்சியும் நிறைந்த அறிவும் பெற்ற மக்கள் வாழ்வாங்கு வாழ்ந்தால் புதிய சமுதாயம் தானே அமையும்.

நன்றி: கிராமராஜ்யம்

## சர்வோதய பாத்திர அன்பர் மறைவு

தெகிவளை - இராமநாதன் அவன்யூவைச் சேர்ந்த சட்டத்தரணி ம. இரத்தினசிங்கம் அவர்கள் இயற்கை எய்தினர். அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அநுதாபத்தையும் தெரிவிக்கிறோம்.

★ ஆக்கப்பணியால் நாட்டை உயர்த்து ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியசோதனையிலிருந்து

## சில முத்துக்கள்

ஒவ்வொரு மனிதனும் தன்வாழ்க்கையில் போற்றிக் காக்க வேண்டியது ஒழுக்கம். அதனை அக ஒழுக்கம் புற ஒழுக்கம் என்று இருகூறுக்கியும் நுணுக்கமாகப் பார்க்கலாம்.

உண்மை, அருள், அறம் முதலாய பண்புகளைக் கடைப்பிடித்து ஒழுகுவது அகஒழுக்கம். உணவு, உடை உறைவிடம் இவற்றில் எளிமையும் தூய்மையும் காப்பது புற ஒழுக்கம்.

**''சத்தியம் என்பது உண்மை பேசுவது மட்டுமல்ல, உள்ளத்திலும் உண்மையோடு இருப்பது என்பதையும் குறிப்பிடுவதாகும்.''** (சத்திய சோதனை நூலின் முன்னுரையில் காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளது.)

இன்றும் உண்மை பேசப்படுகிறது. ஆனால் உண்மை நினைக்கப்படுவதில்லை. நினைப்பதற்கும் - பேசுவதற்கும் - செய்வதற்கும் மைல்கணக்கான இடைவெளிகள் காணப்படுகின்றன.

அதனாலேயே நாட்டில் போலித்தனமான மனிதர்களும், போலித்தனமான உறவுகளும் தோன்றின. மனச்சாட்சியை விடுவித்துப் பலர் பல காரியங்களில் ஈடுபடுகின்றனர்.

காந்தியடிகளே சொல்கிறார் **''நோக்கம் மட்டும் தூயதாக இருக்குமாயின் ஒருவன் இறுதியில் காப்பாற்றப்படுவான்''** என்று. (சத்திய சோதனை முதல் பாகம் 4 ஆம் பகுதி)

ஆதலின் நம் நோக்கம் தூயதாக இருக்க, நம் எண்ணத்தில் தூய்மையை வளர்க்க வேண்டும். போலித்தனமானவைகளில் வெறுப்பைக் கொள்ள வேண்டும்.

காந்தியடிகளின் கருத்துக்களில், சத்தியத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் முதலில் தங்கள் நோக்கத்தைச் செம்மைப்படுத்த வேண்டும். அஃதாவது அகத் தூய்மையைப் போற்ற வேண்டும். அதற்கு ஒருவழி சத்திய சோதனையை மீண்டும் ஒரு முறை இந்த உணர்வோடு படித்துப் பாருங்கள்.

அக ஒழுக்கத்திற்கும் மன அமைதிக்கும் அது சிறந்த வழிகாட்டியாக அமையும்.

## "நாவடக்கம்"

நாக்கு என்பது ஒரு முக்கியமான உறுப்பு. ''எலும்பு இல்லாத நாக்கு எங்கும் பிறழும்''-''தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு''-யாகாவராயினும் 'நா' காக்க'' -என்பன போன்று நாவின் தன்மைகள் பற்றி எத்தனையோ சொற்றொடர்கள் மொழிகள் தோறும் உள்ளன.

சக்தி படைத்தவருடைய நாக்கு உலகினையே வாழ்த்தவும், வீழ்த்தவும் தகுதி பெற்றதாகிறது என்பதை நினைக்கும் போது இராமாயணம், அரிச்சந்திரன் கதை தொட்டு ஹிரோஷிமாவில் அணுகுண்டு வெடித்தது ஈறாக எத்தனையோ நிகழ்ச்சிகள் ஒரு நாக்கின் வாயிலாவன்றோ நிகழ்ந்தன! என்று ஞாபகத்திற்கு வருகிறது.

''எவரும் உன்னைக் கேளாத போது பதில் சொல்லாதே! இருவர் பேசிக்கொண்டிருக்கையில், இடையில் புகுந்து எதுவும் சொல்லாதே! ஒருவரைப்பற்றி இன்னொருவரிடம் குறைவாக எதுவும் சொல்லாதே! கபடமாகவும், பொய்யாகப் புனைந்தும் எவரிடமும் பேசாதே'' என்று மகா வீரர் கட்டளை இட்டிருக்கிறார் என்பதிலிருந்து நாவினைக் காப்பது அவசியம் என சொல்லாமலேயே விளங்குகிறது.

நாவுதான் மனிதனிடமுள்ள நல்ல அம்சம்; கெட்ட அம்சமும் இது வே தான். அது நம் வசமானால் அதைவிட உயர்ந்த பொருளில்லை. நாம் அதன் வசமானால் அதை விடத் தீய பொருள் இல்லை. பேச்சிலும்சரி, உணவிலும்சரி, இதே பொருந்துவதாக அமைகிறது.

இனிய உளவாக இன்னாத கூறலைத் தமிழ் மறையும் வெறுத்தே வந்திருக்கிறது. எனவே காந்தியடிகள் தம் 11 விரதங்களில் இதனையும் 28 அம்சமாகச் சேர்த்திருக்கிறார்.

## அகில இலங்கை காந்தி சேவா சங்கம்

### களுவாஞ்சிக்குடி கிளை

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஒந்தாச்சி மடத்தில் காந்திய அன்பர்கள் 12. 06. 77 இல் அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் கிளையை நிறுவியுள்ளனர்.

தலைவர்: திரு. வி. குணசேகரன்
உப. தலைவர்: திரு. ப. விஸ்வையா
செயலாளர் திரு. இ. முருகமூர்த்தி
உப. செயலாளர்
திரு. அ. சிவசிதம்பரப்பிள்ளை
பொருளாளர்:
திரு. வை. இராதாகிருஷ்ணன்

கிளைச் சங்கத்தைத் தொடக்கி வைத்தபோது மட்டக்களப்பு மாவட்ட காந்தி சேவா சங்கத்தைச் சேர்ந்த திருவாளர்கள் பி. ரி. அரசன், க. பாரதிதாசன், அ. செல்வேந்திரன், வ. சிவசுப்பிரமணியம் ஆகியோர் சமுகமளித்து ஆசி வழங்கினார்கள்.

******************************

கண் - பாராமல் சாதித்தது இல்லை. காது - கேளாமல் சாதித்தது இல்லை; வேலை செய்யாதவன் - வயிறு, பசியினைத் தான் சந்திக்கும். ஆனால் நாவின் குணமோ - அது இயங்கியும் சாதிக்கும்; இயங்காமல் இருந்தும் சாதிக்கும்.

ஒருவனைச் சந்தித்தால் அவன் வாய் திறவாதிருந்தால் அவனை அறிவு மிகுந்தவன் என்று எண்ணலாம். இரண்டாம் முறை சந்திக்கும்போதும் பேசாதிருந்தால் ஜாக்கிரதை உடையவன் என்று கருதலாம். ஆனால் மூன்றும் முறையும் மௌனம் சாதித்தால் - அறிவாளிதானா என்ற கேள்விக் குறி தோன்ற வாய்ப்புண்டு!

காந்தி அடிகள் தம் வாழ்வில் பேசிச் சாதித்தார். சில காரியங்களை எழுத்தில் சாதித்தார், மற்றும் சில காரியங்களை மௌனத்தினால் சாதித்தார்.

நாக்கு என்னும் ஆயுதத்தை உபயோகிக்கவும் தெரியவேண்டும். உபயோகிக்காதிருக்கவும் தெரிய வேண்டும்.

எங்கே - எப்படி - எவ்வளவு உபயோகிக்கிறார் என்பதனைப் பொறுத்தே ஒருவரது தன்மை நிர்ணயிக்கப்படுகிறது. நாவினை வென்றோன் ஞானியாகலாம்.

— வீ. பாலசுப்பிரமணியம்

**★ வாயளவில் பேசுவதைவிட, செயலில் காட்டுக ★**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வோதயமும்

## சமுதாயப்பிணியும்

இன்று தமிழ் மக்களை எதிர் நோக்கும் பிரச்சினை ஒரு தனித் தமிழ்ப்பிரச்சினை அன்று. மனிதர் பிரச்சினையில் இலங்கை வாழ் மக்கள் பிரச்சினையும் அடங்கும். ஒரு தனி இனம் தன் உரிமை இழந்து தவிக்கும் நிலை எய்துகின்ற பொழுது, சர்வோதய முறையில் என்ன வழியைக் கடைப்பிடித்துத் துன்பத்தை நீக்கவேண்டுமென்பது கேள்வி?

இலங்கைத்தமிழர் இந்தியத்தமிழரினின்றும் வேறல்லர். இவ்விருவர் நலனும் இலங்கை வாழ் சிங்களர் இஸ்லாமியர் நலனின்றும் வேறுபட்டதன்று. இது சர்வோதய சித்தாந்தத்தினின்றும் பெறப்படும் உண்மை. ஆயின் உரிமை இழந்து அல்லற்படுவர் தமிழினத்தவர். வருங்காலத்தை எண்ணி இவர் பதற்றமடைதல் இயற்கையே. இப்பதற்றத்திற்குப் பரிகாரம் என்ன? மற்றைச் சமூகத்தினர்போல் சகல உரிமைகளும் பெற்று வாழ்ந்தால் தான் பதற்றம் நீங்கும்.

உரிமை இழந்ததிற்குக் காரணம்? சமூதாயத்தில் பண்பாட்டு இழிவும் பொருளாதாரச் சமத்துவமின்மையுமே காரணமாகும். இதற்குக் காரணம் வரலாற்று நிகழ்ச்சியும் சமுதாயத்தில் கட்டுக் கோப்பின்மையுமேயாம். வரலாற்று நிகழ்ச்சிகளால் ஒரு சமுதாயம் ஒரு சமுதாயத்தின் மேல் சந்தேகமும் பயமும் கொண்டு மற்றையதை அமுக்க நினைப்பதும் மற்றையதும் அதன் விளைவாக எதிர்த்தாக்கமாகப் பயமும்குரோதமும் கொள்வதும், இயற்கையாகிவிட்டன. உலக நாடுகளிடை எழும் பகையும் போரும் இவ்வாறு அச்சத்தினாலும் சந்தேகத்தினாலும் எழுவனவாம்.

உரிமையைப் பெறும் பொருட்டுப் பாடுபடும் அதே வேளையில் இந்த அச்சமும் சந்தேகமும் கூடவே வளர்ந்து உரிமை எண்ணத்தை மறைத்துவிடும். அதனாலேயே பதற்றம் தோன்றுகிறது. அவைக்குப் பதிலாக உரிமையின் எண்ணம் மனதில் குடிகொள்ளுமானால் பதற்றமும் சந்தேகமும் மறைந்து விடும்.

ஓர் இனத்தவர் தாம் பெறப்போகும் உரிமையை தம் மனத்திலும் மற்றையவர் மனத்திலும் குரோதத்தை வளரவிடாமல் பெறப்பாடுபடுவதே சிறந்தவழி. ஆயின் ஒருகேள்வி. உரிமை பற்றிய சிந்தையோ, குரோதமோ இல்லாத மக்களும் வன் செயலுகளுக்கு ஆட்பட்டு அல்லற்படுகின்றார்களே! அதற்கு என்ன செய்வது என்பது அது.

உண்மையில் உரிமையைப் பற்றிச் சிந்திப்போர் கைஆளும் குரோதமனப்பான்மையினாலும், உரிமையைப் பற்றிச் சிந்திக்காதவரின் இயலாத்தன்மையினாலுமே சமூகத்தில் பதற்றம் ஏற்படுகின்றது. இந்தப் பதற்றம் வன்செயல்களைச் செய்வார் அதற்கு ஆட்படுவார் இருவர் பகுதியிலும் நிகழ்வதாம். ஒன்று அறியாமையால் வருவது. மற்றையது பயத்தால் வருவது. இந்தக் குரோதம், பயம் இரண்டையும் நீக்கக் கூடிய ஒரே மார்க்கம்தான் சர்வோதயம்.

தனி நாடு ஒன்று அமைத்தாலென்ன, மாகாண சுயாட்சி அமைத்தாலென்ன, சமூகங்களிடை நட்பும் நேயமும் இல்லாவிட்டால் படைப்பெருக்கமும், சூழ்ச்சியும் எல்லைப்போரும் இருந்தே தீரும். குரோதம் தொடர்ந்து நெஞ்சில் குடிகொள்ளுமானால், சமூகத்திற்கு உழைக்கும் மனப்பான்மை மறைந்து குரோதத்தினை வலுப்படுத்தவே மனமும் ஏங்கிநிற்கும். அதிலேயே மனிதன் தன் உழைப்பினைச் செலவழிப்பான். ஏனெனில் மனிதர் எல்லோரும் நினைக்கிறார்கள், குரோதம் தான் தம் கொள்கையை சுதந்திரத்தை விடாப்பற்றுடன் வைத்திருப்பதற்கு ஏற்ற வழி என்று. மாக்சிய சித்தாந்தமும் குரோதத்தை ஒரு சாதனமாகக் கையாண்டு வந்துள்ளது.

சர்வோதயம் எல்லோர் வாழ்வையும் மனதில் இருத்துவது. ஒரு தனி இனம் கூடிய உரிமைகள் பெற்று, மற்றையவர்க்குத் துன்பம் கொடுக்காமல் வாழ்வது. என்றும் சிறந்தவழி. தனிமனிதன் எவ்வாறு சுதந்திரத்துடன் வாழவேண்டுமோ, அவ்வாறே, ஒவ்வொரு குடும்பமும், கிராமமும், மாவட்டமும், இனமும் வாழவேண்டும். ஆனால் இவை எல்லாம் மனித குலத்தின் பொது நலத்திற்குக் கேடில்லாத வகையில் அமைய வேண்டும்.

எனவே எந்த ஒரு சமுதாயமும் தன்னை மேன்மைப்படுத்த எண்ணுவது போல் தன் சமுதாயத்தை மேம்படுத்த நினைத்தல் வேண்டும். தாம் தம் பண்பாடு, ஆசாரம் ஆகியவற்றைக் காப்பாற்ற உழைக்கும் வழியில் துன்பங்கள் நேர்ந்தால் அது தம் கடமை என்று உணர்தல் வேண்டும். மாற்றார் மாட்டு குரோதம் கொள்ளாது நம் துயர் தாங்கும் தன்மையால்தான் ஒரு சமுதாயம் முன்னேற முடியும். இது சர்வோதய நெறி. குரோத நெறியால் ஒரு சமுதாயத்தை நிறுவினால் அது குரோதத்தையே வளர்த்துக்கொண்டே இருக்கும்.

பதற்றத்தை நீக்குவதற்கு ஒரே வழி நம் துன்பம் ஆனது ஒரு தியாகம் என்றும் ஒரு மேம்பாடு குறித்து நோற்கும் தவம் என்றும் கொள்ளல் வேண்டும். ஆதலால் அறவே குரோதத்தைக் கைவிடல் வேண்டும். பதற்றம் தானாக நீங்கும். குரோதம் நீங்கப் பதற்றம் நீங்கும்.

''ஞாலம்'' கருதுபவர் கலங்காது
காலம் கருதி இருப்பர்.
(வள்ளுவர்)

இச்சை பயம் குரோதம் விட்டு
மனனசீலனாய்
இருப்பவனே விடுதலை மோட்சம்
பெறுவான்
(கீதை)

### சம்பத்துத்தான அன்பர் மறைவு

வெள்ளவத்தை 47 ஆவது ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி க. இரத்தினசபாபதி அவர்கள் இயற்கை எய்தினார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அநுதாபத்தையும் தெரிவிக்கிறோம்.

### வரப்பெற்றோம்

**புதிய உலகம்**

சிந்தனையூட்டும் சஞ்சிகை
ஆசிரியர்
கரைவையூர்ச் செல்வம்
சமூகத் தொடர்பு நிலையம்
45, கின்ஸிசாலை
கொழும்பு-8

இப் பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் திரு. சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்தி சேவா சங்கச் சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு — குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது. Registered at the G. P. O as a Newspaper in Sri lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org